பாடம் - 16

## தேவனுடைய தெய்வீகத் திட்டம்

# கிறிஸ்துவின் சபை

பாகம் - 1



# THE CHURCH OF CHRIST

PART - 1

For Further Details : Email us : baskar_harvest@yahoo.co.in, baskarharvest@gmail.com
Phone : 97886 19229, 93641 50005

# கிறிஸ்துவின் சபை பாகம் - 1



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இப்பாடத்தில் இயேசுகிறிஸ்துவின் சபை குறித்து ஆராய்வோமா? முதலாவது சபை என்றால் என்ன? ஏன் இன்று அநேக சபைகளும் அவைகளில் அநேக பிரிவுகளும் உள்ளன? இயேசுகிறிஸ்துவின் சபை என்பது இந்த சபைகள் அனைத்தையும் குறிக்கிறதா? இக்கேள்விகளுக்கெல்லாம் பதில் என்ன? சில வசனங்களைக் கொண்டு இப்பாடத்தைத் துவங்கலாம்.

**1கொரிந்தியர் 12:12 - எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம், ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்"**

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அநேக அங்கங்கள் இருந்தாலும் சபை ஒன்றே என்றும், இவர்கள் ஒருமைப்பாடு உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்றும் காண்கிறோம்.

ஆனால் இன்று அப்பேர்ப்பட்ட ஒருமைப்பாடு காணமுடிகிறதா? காணமுடியாததற்கான காரணங்கள் என்ன? இன்றைய பாடத்தில் இதற்கான பதில்களை நாம் காண்போம். முதலாவதாக,**"சபை"** என்று இயேசு பேசின வசனப்பகுதியைப் படிக்கலாம்.

**மத்தேயு 16:18 " நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என வாசிக்கிறோம்.**



☞ இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் என்றால் என்ன?

- சபை என்றால் ஒரு கட்டிடத்தைக் குறிக்கிறதா?
- ரோமன் கத்தோலிக்க சபையில் இக்கல்லானது இயேசு தன் சபையின்மீது பேதுருவை தலைவராகவும், எல்லா போப்புகளிலும் இவரே முதலாவது போப் என்றும் தெரிவிக்கின்றனர். இது உண்மையா?

மேற்கண்ட வசனத்தின் கருப்பொருளை அறிய வேண்டுமானால், முந்தைய சில வசனங்களையும் நாம் கவனிக்க வேண்டும்.


**மத்தேயு 16:13-17 பின்பு இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி, மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.**

**அதற்கு அவர்கள், சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும் , சிலர் எலியா என்றும், வேறுசிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.**


**அப்பொழுது அவர்- நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.**

**சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.**

**இயேசு அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான் , மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.."**



இந்த சந்தர்ப்பத்தில் கர்த்தர் பேதுருவிடம், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் எனும்போது, சபையானது இந்த கல்லிற்கு மேலாக கட்டப்படும் என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டுள்ளதே தவிர, அதற்கு கீழாக என்று அர்த்தமல்ல. இந்தக் கல் என்பது பேதுரு கூறின "சத்தியத்தை" குறிக்கிறதே தவிர, நேரடியாக பேதுருவைக் குறிப்பதில்லை. ஆண்டவராகிய இயேசு, சபையின் கட்டிடம் முழுவதையும் தாங்கி நிற்கக்கூடிய ஒரு அஸ்திபாரக் கல்லைக் குறித்தே பேசினார். பேதுரு சபையின் அஸ்திபாரக் கல்லாக இருக்கிறாரா? இதற்கான பதிலை வாசிக்கலாம்.



**1கொரிந்தியர் 3:11ல்,"போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுவையல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவராலும் கூடாது"**

ஆம். இயேசு தாமே சபையின் அஸ்திபாரக் கல்லாக இருக்கிறார். நிச்சயமாக 2000 வருடங்களாக முழு சபையின் பாரத்தை பேதுருவால் சுமந்திருக்கமுடியாது. மாறாக யேசுவாலே மாத்திரமே முடியும்.

**மத்தேயு 28:20 - ".. இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்"**

மேலும் பேதுரு சில வருடங்களே வாழ்ந்து மரித்தார் என்று நாம் அறிவோம். ஆனால் என்றைக்கும் உயிரோடு இருக்கிறவராகிய இயேசு ஒருவரால் மாத்திரமே சபையின் பாரத்தை 2000 வருட காலமாக சுமந்திருக்கமுடியும்.

அது மாத்திரமல்ல, மத்தேயு 16:18 வசனத்தை கிரேக்கபாஷையில்வாசிக்கையில்,


**"நீ பேதுருவாய் (பெட்ரோஸ்- சிறிய கல்) இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் (பெட்ரோ- பெரிய கல் அல்லது பாறை) என் சபையைக் கட்டுவேன்.."**

அப்.பேதுரு தன் நிருபத்தில் கூறும்போது,

**1பேதுரு 2:5, "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும்.."**

என்கிறாரே. ஏனெனில் தான் மாத்திரமே அந்தக் கல்லாக இல்லாமல், அநேகக் கற்கள் உள்ளதை அவரே கூறுவதை கவனிக்கலாம்.

**1தீமோத்தேயு 3:15ல் - " இந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது"**




எனும்போது, சபை என்பது ஒரு கட்டிடத்தைக் குறிக்காமல் ஆவிக்குரிய அர்த்தத்தில் உருவக பாஷையில் உள்ளதைக் குறிக்கிறது.

மேலும் மத்தேயு 16:18ல், இயேசு என் சபை என ஆவிக்குரிய சபையைக் குறித்து பேசுகிறாரே தவிர அநேக சபைகளைப் பற்றி பேசுகிறதில்லை.

இவ்வாறிருக்க, இன்று அநேக சபைகள் இருப்பதுடன் ஒன்றுக்கொன்று ஏன் ஒத்துப்போவதில்லை?
இப்பிரச்சனையானது ஆதி சபையிலேயே இருந்ததை அப்.பவுல் கூறும்போது,

**1கொரிந்தியர் 3:3,4ல்,"ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும், வேறொருவன் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் என்றும் சொல்லுகிறபடியால்**

**நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா?"**

என அவர்களை கண்டிப்பதை அறிகிறோம்.

இன்றும்கூட அநேக சபைகளில் தங்கள் தலைவர்களைப் பின்பற்றுகிறார்களே தவிர கர்த்தராகிய இயேசுவையும் அவருடைய வார்த்தைகளையும் பின்பற்றுகிறதில்லை. ஆக, இன்று உலகெங்கும் 30,000 கிறிஸ்தவப் பிரிவுகள் உள்ளதை ஆதாரப்பூர்வமாக நாம் அறிவோம்.

அப்படியானால், ஒரே சபை, ஒரே சரீரம் என்றால் என்ன? எங்கே அந்த சபை?

**எபிரேயர் 12:23ல்,"பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேரானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும்.."**

இவர்களையே அந்த சபை என இயேசு போதிக்கிறார். இந்த சபையானது இயேசுவோடுகூட இருப்பதை தீர்க்கதரிசனத்தில் நாம் வாசிக்கையில்,

**வெளி 17:14ல், ".. அவரோடேகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்"**

கிறிஸ்துவின் சபை மூன்று படிகள் கொண்ட வளர்ச்சியுடையது. இந்த மூன்று படிகள் மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. இது இயேசுவின் சரீரமாகிய உண்மையான சபையைக் குறித்த இரகசியமாகும். இப்பாடத்தில் இரண்டு படிகளைப் பற்றிப் பார்ப்போம்.

## 1. முதல் படி - அழைக்கப்பட்டவர்கள்

**மத்தேயு 22:14ல், "அந்தப்படியே அழைக்கப்பட்டவர்கள் அநேகர். ஆனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர்"**

இங்கு முதல் இரண்டு நிலைகளும் அவைகளின் எண்ணிக்கையும் சொல்லப்பட்டிருக்கிறது. அழைக்கப்பட்ட நிலையில் அநேகரும், தெரிந்துகொள்ளப்பட்ட நிலையில் சிலரும் இருப்பதாக வாசிக்கிறோம்.

முதற்படியாக அழைக்கப்பட்டவர்கள் எங்கிருந்து அழைக்கப்படுகின்றனர்?

**யோவான் 15:19ல் - ".. நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும்.."**

எனும்போது அழைக்கப்பட்டவர்கள் யாரென்றால் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு இயேசுவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருடைய சிலுவை மரணத்தின்மீது நம்பிக்கையுள்ளவர்களாக உள்ளனர்.


இவர்களைப்பற்றி விசுவாசிகள் என்றும் அழைக்கலாம். மேலும் இவர்கள் ஞாயிற்றுக்கிழமை

ஆராதனைகளில் தவறாது கலந்துகொள்வார்கள். விசேஷ ஜெபம் மற்றும் உபவாச கூட்டங்களிலும் கலந்து கொள்வதுடன் தவறாது தசம பாகம் செலுத்துவர். மேலும் தங்களிடமிருந்து பாவத்தைப் போக்க பெருமுயற்சி ஒழுக்கரீதியான வாழ்க்கை வாழ விரும்புவர்.

இவர்களே, அழைக்கப்பட்டவர்களாக, எல்லா சபைகளிலும் உள்ள கிறிஸ்தவர்கள் ஆவர். உலகின் எல்லா ஜனங்களும் அழைக்கப்படுவதில்லை. ஏனெனில் தேவன் இந்த யுகத்தில் கிறிஸ்துவின் சபையோடு தொடர்பு கொள்ளுகிறார். வருங்காலத்தில் உலகின் ஜனங்கள் அனைவரிடத்திலும் தொடர்பு கொள்ளுவார்.

ஆக அழைக்கப்பட்டவர்கள் அநேகர் என்று சொல்லும்போது தெரிந்து கொள்ளப்பட்டவர்களைவிட அநேகர் என்றே பொருள். இந்த அழைப்பானது இந்தியாவில்கூட வந்துள்ளது. அப்போஸ்தலன் தோமா மூலமாக கேரளா மாநிலத்திலும் , தமிழ்நாட்டிலும் முதலாம் நூற்றாண்டிலேயே துவங்கியது. அப்போஸ்தலர் தோமாவின் ஊழியத்தின்மூலம் இந்தியாவில் கிறிஸ்தவர்களாக மாறினவர்களின் எண்ணிக்கை குறித்த ஆதாரம் எதுவுமில்லை. பிற்பாடு ஏறத்தாழ 18 நூற்றாண்டுகள் வரை கிறிஸ்தவத்தின் வளர்ச்சி பற்றி எங்கும் கூறப்படவில்லை.





தமிழ்நாட்டில் 18ம் நூற்றாண்டில் வில்லியம் கேரி (1761-1834) என்பவர் வந்து ஏறத்தாழ 26 மொழிகளில் வேதத்தை மொழிபெயர்த்தார். புராட்டஸ்டன்ட் பிரிவைச் சார்ந்த இவர், இங்குள்ள வேறுபட்ட மொழிகளே பிரச்சனை என்று உணர்ந்து, அந்த மொழிகளில் வேதாகமத்தை கொண்டு வருவதற்காக முனைப்போடு செயல்பட்டார். இந்தக் காலகட்டத்திலிருந்து கிறிஸ்தவமும் சபைகளும் இந்தியாவில் பெருகத் துவங்கியது.

ஆக,"அழைக்கப்பட்டவர்கள்" படி கிறிஸ்துவின் சயில் முதற்படி. அதாவது விசுவாசப்படி மற்றுமொரு வகைகளில் கூறினால் இவர்கள் சபையில் "குழந்தைகள்" எனலாம். குழந்தைகள் எவ்வாறு பாலை விரும்புகின்றனரோ அதுபோல இவர்கள்கூட விரும்புகின்றனர்.



**1பேதுரு 2:2,3ல், "நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்"**

இந்தப் பால் என்றால் என்ன?

**எபிரேயர் 5:12ன்படி, மூல உபதேசங்கள்** (Basic Doctrines) ஐக்

குறிக்கிறது. மூல உபதேசங்கள் எவை என்று **எபிரேயர் 6:1-3** கூறுகிறது -

**"கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்துபோவோமாக. தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்வோம்"**

ஆக, விசுவாசிகள் தேவனுடைய வார்த்தையை நன்கு படிக்க உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். இது அவர்களுடைய தேவ அறிவை பெருக்கிக்கொள்வதுடன் தங்களுடைய சொந்த பாவங்களை வசனத்தின்மூலம் கழுவுகிறார்கள்**(எபி 5:26)**. இவ்வாறு நீதிமானாக்கப்பட்ட நிலையை அடைகிறார்கள். அது மாத்திரமல்ல,

**ரோமர் 5:1ன்படி, "இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்-பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்"**

இவர்கள் விசுவாசிகளாக இருந்தால் மட்டும் போதுமானது என நம்புகிறார்கள். ஆனால், கிறிஸ்தவ ஜீவியத்தில் முன்னேறுவது தேவனுடைய வார்த்தைகளில் அடையும் ஞானத்தைப் பொறுத்தமைகிறது.

**யாக்கோபு 2:17ல்,"கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது**

என அப்.யாக்கோபு கூறுகிறார்.

எம்மாதிரியான கிரியை? விசுவாசமானது முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்லும் கிரியைகளாக மாறவேண்டும். ஒரு கிறிஸ்தவனிடமிருந்து எவ்விதமான கிரியைகளை தேவன் எதிர்பார்க்கிறார்? இயேசு கூறும்போது,

**யோவான் 6:29ல்,"..அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது".**

அதாவது விசுவாசித்து தேவனுடைய கட்டளைகளின்மேல் நம்பிக்கை வைத்து அவற்றிற்கு கீழ்ப்படிதலே அந்த கிரியை.

**யோவான் 8:31ல் - "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி : நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்"**

என இயேசு கூறுகிறார். ஆக, அழைக்கப்பட்டவர்கள் மேலும் வளர்ந்து கிறிஸ்துவைப்

பின்பற்றவேண்டும்.

**பிலிப்பியர் 1:29ல்,"ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கும் மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் அருளப்பட்டிருக்கிறது".**

மேலும் வாசிக்கையில்,

**1பேதுரு 2:21 ல் - "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்"**

என்று பார்க்கிறோம். அழைக்கப்பட்ட நிலையிலிருந்து, நம்பிக்கையானது வளர்ச்சிபெற்று, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் நிலைக்கு முன்னேறவேண்டும்.

ஆனால், அழைக்கப்பட்ட அனைவரும் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக வருவதில்லை. அம்மாதிரியை கண்டுபிடிக்கிறவர்களே சிலர். இயேசு கூறும்போது,



**மத்தேயு 7:14இல்,"ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்"**

எனக் கூறுவதைப் பார்க்கிறோம். ஆக, அநேகர் அழைக்கப்பட்டவர்களாகவே இருந்து மரித்து வருகின்றனர்.

### 2. இரண்டாம் படி - தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் :-

**மத்தேயு 22:14ல் - "தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய சிலர்"** இந்த சிலரே கர்த்தருடைய வார்த்தைகளை கேட்டு அவற்றிற்கு கீழ்ப்படிகிறவராகிறார்கள்.

**மத்தேயு 16:24ல் - "ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்து என்னைப் பின்பற்றக் கடவன்"**

இங்கு **கர்த்தரை பின்பற்றி நடக்க விரும்பினால்**(Personal choice) என்று வருவதை கவனிக்கவும். இது அவரவருடைய தனிப்பட்ட விருப்பத்தைச் சார்ந்தது. பின்பு ஒருவர் செய்யவேண்டியது என்ன?

**"தன்னைத்தான் வெறுத்து".** இதையே முதலில் கர்த்தராகிய இயேசுவே செய்து காண்பித்தார். அவர் ஞானஸ்நான உடன்படிக்கை செய்தபோது தம் உள்ளத்தில்,

**எபிரேயர் 10:7ல் - "அப்பொழுது நான்: தேவனே உம்முடைய சித்தத்தின்படிசெய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்"**

மற்றும் **யோவான் 6:37,38**ஐயும் வாசிக்கவும். இங்கு இயேசு, தம் பிதாவின் சித்தமே தாம் நிறைவேற்றினது போல் தம்முடைய சீஷர்களையும் இவ்வாறிருக்கவே அழைக்கிறார்.

இதையே அப்.பவுல் கூறும்போது,

**ரோமர் 12:2ல்," நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கொத்த வேஷந் தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறு ரூபமாகுங்கள்"**

நம்முடைய சுய சித்தம் அதாவது இவ்வுலகத்தின் ஆவி படிப்படியாக வெறுக்கப்பட்டு, தேவ சித்தத்தை உணர்ந்து அதை கண்டிப்பாக செய்தலைக் குறிக்கிறது. இதுவே நம்மை முழுவதுமாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக முடிகிறது. இதுவே நம்மை நாமே கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தலைக் குறிக்கிறது(Consecration).

இது இயேசுவின் மாதிரியை பின்பற்றும் வாழ்வில் உள்ள பலியைக் குறிக்கும். "சிலுவை" அல்லது பலி என்பதன் பொருள் என்ன என்று அப்.பவுல்

**ரோமர் 12:1ல்,"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை".**

ஜீவபலியென்பது நம்முடைய சரீரத்தை அல்லது வாழ்க்கை மற்றும் அதன் உரிமைகளை கர்த்தர் இயேசுவின் ஊழியத்திற்காக பலிசெலுத்துவதைக் குறிக்கிறது. இந்த ஜீவபலியில் ஐந்து முக்கியமான காரியங்கள் உள்ளடக்கியது.

**1. நேரம் (ஆண்டவரின் ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட நேரம்)**

**2. உடல்நலம்(ஆண்டவருடைய ஊழியத்தின்நிமித்தமாகசெலவிடப்படும்சக்தி)**

**3. ஐசுவரியம்(ஆண்டவரின் ஊழியத்திற்குப் பயன்படுத்தப்படும் பணம்,வீடு, உடைமைகள், வாகனம், படிப்பு முதலானவை)**

**4. அறிவுத்திறன்(பேச்சுத்திறமை, வரைதல், மொழிபெயர்த்தல், பாட்டு எழுதுதல்)**

**5. செல்வாக்கு(பொது மேடையில் பேசுதல் மற்றும் கர்த்தருடைய பணிக்காக**

**மற்ற மனிதர்களையும் முறையாக பயன்படுத்துதல் முதலியன)**

இங்கு, ஒவ்வொருவரும் பெற்றிருக்கிற தாலந்துக்கேற்றபடி அவைகளை பலிசெலுத்தவேண்டும் என்பதை நினைவில்கொள்ளவேண்டும்.

**லூக்கா 12:48ல் "..எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்.."**


இப்படியான பலியின் ஜீவியம் ஒரு உடன்படிக்கைமூலம் ஆரம்பமாகிறது.

**சங்கீதம் 50:5ல் "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்".**

சகோதர சகோதரிகளே, இது ஒரு இரகசியமான உடன்படிக்கை. இதுபற்றி தெரிந்துகொள்ளுகிறவர்கள் ஒரு சிலரே.

**சங்கீதம் 25:14ல் "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்"**

ஆம் அன்பானவர்களே, எவ்வாறு திருமணம் போன்ற பெரிய உடன்படிக்கையானது அநேகருக்கு முன்பாக சாட்சியாக நடைபெறுகிறதோ, அதுபோல கர்த்தருடைய உடன்படிக்கை என்பதும் அநேகருக்கு முன்பாக எடுக்கப்படும் "ஞானஸ்நான உடன்படிக்கையாகும்". திருமண உடன்படிக்கையானது மணவாளன் மணவாட்டியிடையே மோதிரம் மாற்றுவது, தாலி அணிவிப்பது, மாலை மாற்றுவது போன்ற அடையாளங்களால் வெளிப்படுத்தப்படுகிறது. அவ்வாறே ஞானஸ்நானம் என்னும் இரகசிய உடன்படிக்கையும் தண்ணீர் முழுக்கினால் வெளிப்படுத்தப்படுகிறது.



இயேசு தன் ஞானஸ்நானத்தில் எவ்வாறு தேவனோடு உடன்படிக்கை செய்தாரோ அதுபோல இங்கும் நம்மில் ஒருவர் கிறிஸ்துவோடுகூட உடன்படிக்கை செய்கிறார்.

தண்ணீரில் நிற்கும்போது பாதி உடல் தண்ணீரில் இருப்பது - இன்னும் நாம் உலகத்தில் இருக்கிறதையும் பாதி உடல் தண்ணீருக்குமேல் உள்ளது
- நாம் உலகத்தாரல்ல என்பதையும் தெளிவாக குறிக்கிறது(யோவான் 15:19)

தண்ணீர் உலகத்தைக் குறிக்கிறது(வெளி 17:15)

கைகளைக் குவித்துக் காத்திருப்பது நம்மை முழுமையாக கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பதைக் குறிக்கிறது. தண்ணீரில் நம்மை மூழ்கச் செய்பவர் நம் கர்த்தரையே குறிக்கிறார்.

ஏனெனில் தலையாகிய அவருடைய சித்தம் செய்ய அவரிடமே ஒப்புக்கொடுக்கிறோம்.

பின்புறமாக தண்ணீரில் மூழ்கச் செய்தல் நம்முடைய மாம்சீக வாழ்க்கை மற்றும் அதன் உரிமைகள் மரிக்கச் செய்வதைக் குறிக்கிறது **(கொலோ 3:3).**

மீண்டும் தண்ணீரில் இருந்து மேலே வருவது பலியின் உடன்படிக்கையை விசுவாசத்தோடு நிறைவேற்றி முடிக்கும்போது,"உயிர்த்தெழுதலில் மீண்டும் ஜீவன் அடைவோம் என்ற வாக்குத்தத்தைக் குறிக்கிறது**(யோவான் 6:44).**

இது ஆவிக்குரிய பரலோக வாழ்க்கைக்கான உயிர்த்தெழுதலாகும். இதைக்குறித்தே அப்.பவுல் எபேசியர் 4:5ல், கிறிஸ்துவின் சபையின் "ஒரே ஞானஸ்நானம்" என்கிறார்.
ஒரு குறிப்பிடத்தக்க அளவு வேத ஞானம் அடைந்த பின்பு எடுக்கப்படும் தண்ணீர் மூழ்குதல் ஆகும்.

ஆகவே, யாரெல்லாம் அழைக்கப்பட்டவர் நிலையிலிருந்து , ஓரளவு ஞானம் பெற்றபிற்பாடு தெரிந்துகொள்ளப்பட்டவர் நிலைக்கு வரவிரும்புகிறார்களோ, அவர்களே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யோர்தானில் ஞானஸ்நானம் எடுத்ததுபோலவே அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்போம் என்பதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் எடுக்கின்றனர்.

இவர்களையே தேவன் தம்முடைய வேதத்தில் பரிசுத்தவான்கள் என்கிறார்(சங்50:5).
மேலும் இந்த வகுப்பாரே, அப்.பவுலின் ஒவ்வொரு நிருபங்களிலும் குறிப்பிடப்படுகிறார்கள். வாசியுங்கள் - 1கொரிந் 1:2, பிலிப் 1:1, கொலோ 1:2.

மேலும் இந்த பரிசுத்தவான்களைக் குறித்து

**2கொரிந்தியர் 5:17ல், இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். முந்தினவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின"**

கிறிஸ்துவுக்குள் என்பது இந்த இரகசியமான உடன்படிக்கைக்குள் இருப்பவர்களைக் குறிப்பதுடன் அவர்கள் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களையும், ஒரு புதிய சிந்தையுடையவர்களாயும் இருக்கின்றனர்.

பழையவைகளாகிய மாம்ச இச்சை, ஆசை, பொய், வஞ்சனை, போட்டி, பொறாமை முதலிய பூமிக்குரிய காரியங்கள் ஒழிந்து, இப்போது அனைத்தும் பரலோகத்துக்குரியவைகளாக மாறுகிறது.

இவ்வாறு தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், அழைக்கப்பட்டவர்களிலிருந்து எல்லாவகையிலும் - பேச்சிலும், செயலிலும், சிந்தனையிலும் வேறுபட்டவராகின்றனர். இவ்வாறு சுவிசேஷயுகத்தில் கிறிஸ்துவின் சபையானது தேர்ந்தெடுக்கப்படுகின்றது. ஆக தெரிந்து கொள்ளப்பட்டவர்களிலும் இரு பிரிவு உள்ளதை கிறிஸ்துவின் சபை பாகம் 2ல் காணலாம்.

**தேவன் தாமே அவர் சத்தத்தைக் கேட்கவும், அவர் சத்தியத்திற்கு கீழ்ப்படியவும் உங்களுக்கு உதவி செய்வாராக. ஆமென்.**